1987 ஏப்ரல் 25] [திரு. செ. இரத்தினவேலு]

இந்தச் சாலை துறையூரோடு இணைக்கிறது. மழைக் காலங்களில் கிட்டத்தட்ட 5, 6 அடி அளவிற்கு தண்ணீர் இந்தச் சாலையின் குறுக்கே போகிறது. அந்த காலத்தில் இந்தப் பகுதியிலிருந்து துறையூருக்கு செல்வதற்கும், துறையூரில் இருப்பவர்கள் புத்தனாம்பட்டியில் இருக்கிற கல்லூரி, மருத்துவமனைக்குச் செல்வதற்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சாலையினுடைய அவசியத்தைக் கருதிஇந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த சறுக்குப் பாலத்தைக் கட்ட ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் ஏற்கனவே பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது. ஆனால் இதிலே இருக்கிற சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்ட வேண்டும் என்று சொன்னால் அது முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பாலத்தின் அவசியத்தைக் கருதி, ஒரு சறுக்குப் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாலம் கட்டுகிறபோது, என்ன அவசியமோ, அதைக் கட்டுவது நல்லது. ஏற்கனவே அரசாங்கத்திலே நிதிப் பிரச்சினை என்று சொல்கிறபோது, தற்காலிகமாக ஒரு பாலம், பிறகு நிரந்தரமாக ஒரு பாலம் கட்டுவது என்பது, அரசு வீணாக பணத்தைச் செலவழிப்பதாகும். எனவே இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் அது முடியாத காரியம். எனவே அதற்கு எப்படித் தேவையோ அப்படியே திட்டம் தீட்டி, நிதிநிலைமை சரியாக இருக்கிறபோது, இதைக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.

(ஏ) சேலம்-ஆத்தூர் சாலையில் ஏற்பட்ட விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. பழனிமுத்து, திருமதி தா. இராசாம்பாள், திருவாளர்கள் கு. ரமணி, வி.பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், சோ. வீரய்யன், மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

[1987 ஏப்ரல் 25

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சேலம்—ஆத்தூர் சாலையில் 8—4—1987அன்று காலை அக்கிசெட்டிப்பாளையம் அருகே தனியார் பஸ், லாரி மோதியதில் 4 பேர்கள் இறந்தும், 20 பேர்கள் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

8—4—1987ஆம் நாளன்று காலை 8 மணி அளவில் சேலம்—ஆத்தூர் சாலையில் வலைப்பாடி காவல் எல்லைக்குட்பட்ட அத்திப்பட்டி என்னுமிடத்தில் ஒரு லாரியும் ஒரு தனியார் பேருந்தும் மோதியதால் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் மூன்று பேர்கள் விபத்து நடந்த இடத்திலேயே இறந்து விட்டனர். மற்றும் ஒருவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டார். மேலும், இவ்விபத்தினால் 19 பேர்கள் காயமுற்றனர். இதில் 12 பேர்கள் படுகாயமுற்றனர். மற்றும் 7 பேர்கள் இலேசான காயமுற்றனர். காயமுற்ற 19 பேர்கள் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். சேலம் மாவட்ட ஆட்சியர், இவ்விபத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக இடருதவிகளுக்கு ஏற்பாடுசெய்தார். மேலும், மரணமுற்றவர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கும்,காயமுற்றவர்களுக்கும் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து இடருதவித் தொகை அளிப்பதற்காக சேலம் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், மாண்புமிகு முதல் அமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து இடருதவித் தொகை அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்தவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் கொடுத்த தொகை எவ்வளவு, காயம் அடைந்தவர்கள் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா? மேலும், இப்படிப்பட்ட கோர விபத்துக்கள் தமிழகத்தில் இனி நடக்காமல் இருப்பதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எவ்வளவு கொடுப்பது என்பதற்கான ஆய்வுகள்தான் இப்போது நடந்து வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை வந்த பின்பு அதை உங்களுக்கு அறிவிக்க முடியும்.

1987 ஏப்ரல் 25] [திரு. சு. முத்துசாமி]

இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை என்பது பொதுவாக வாகனத்தை ஓட்டக் கூடியவர்கள் மட்டுமல்ல, பாதசாரிகளும், பொதுமக்களும் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்தால் தான் இதிலே ஒரு முடிவை நாம் ஏற்படுத்த முடியும். பல இடங்களில் நாம் பார்க்கிறோம், வாகனங்கள் போய்க் கொண்டிருக்கிறபோது, யாராவது நடந்து செல்லக் கூடியவர்கள், அல்லது சைக்கிளிலே செல்லக் கூடியவர்கள் திடீரென்று குறுக்கே வந்து வீடுகிறார்கள். அப்படி வருகிறவர்களைக் காப்பாற்று வதற்காக இந்த வண்டிகளை திசை திருப்பும்போது, பெரிய விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன. மேலும் நடந்து வருபவர் களும், சைக்கிளில் வருபவர்களும், இந்த வண்டிகளுக்கு ஏற்பட்ட விபத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் கவலைப்படாமல் போய்க் கொண்டிருக்கக் கூடிய நிலை கூட இருக்கிறது. எனவே இதை யெல்லாம் கடுமைப்படுத்த வேண்டும், சாலை விதிகளை எல்லோருமே, ஓட்டுநர் முதற்கொண்டு பொதுமக்களும் கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான துவக்கத்தை இப்போது ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக காவலர்களுக்கு வேண்டிய எல்லாவகையான வசதிகளும் அந்தப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிலே இருக்கிற காவல் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) காட்டுமன்னார்கோயில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி.

திரு. மா. **மணிமாறன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காட்டுமன்னார் கோயில்ஆதி திராவிடர் மாணவியர் விடுதியில் கதவுகள் இல்லாத நிலையும், குளிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மாணவியர்கள் வாய்க்காலில் சென்று குளிக்கின்ற நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

காட்டுமன்னார்கோயில் அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியானது 1963ம் ஆண்டு முதல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அக்கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லை. தரை மண்ணாக உள்ளது என்றும், பலமுறை வற்புறுத்தியும் கட்டிடச் சொந்தக்காரர் கட்டிடத்தை செப்பனிடவில்லை என்றும், காட்டுமன்னார்கோயில் ஆதிதிராவிடர் நல தனித் தாசில்தார் தெரிவித்திருந்தார். கட்டிடத்தில் மாணவியர்கள் குளிக்க இடவசதி இல்லையாதலால் விடுதிக்குப் பின்புறமுள்ள